**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**MCOP NO.7/2025**

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 24–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.Dr.V.ஸ்ரீவித்யா, தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.P.கோவிந்தசாமி, பலகை எழுத்தர் நிலை –II அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

பெயர் –திரு.அன்பழகன் PW–1

<u>1– ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1) நான் இழப்பீட்டு மனுவில் சொல்லியுள்ளது போல் விபத்து நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தான் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையை கடந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் நான் தான் என்று சொன்னால் சரியல்ல. ஒன்றாம் எதிர்மனுதாரர் இந்த விபத்திற்கு காரணமே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஒன்றாம் எதிர்மனுதாரர் தனது பாதையில் நேராக தான் மெதுவாகவும் வந்து கொண்டிருந்தார் என்றும் நான் திடீரென்று குறுக்கே சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கோரி இருக்கும்படி எனக்கு வருமான இழப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நிரந்தர ஊனம் நான் சொல்லி இருக்கும்படி மிகைப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று

Dr.V.Sree Vidya Date: 2026.07.24 18:53:18 +0530

சொன்னால் சரியல்ல. என்னுடைய வருமானத்தை காட்ட நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2) முதல் எதிர்மனுதாரர் முறையான பழகுனர் ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தார் என்றும் அவர் தன்னுடன் ஒரு இன்ஸ்டெக்ட்ர்-யை வைத்துக் கொண்டுதான் வாகனத்தை செலுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. வேலவன் என்பவரின் அறிவுரையின் பெயரில் தான் வாகனத்தினை செலுத்தினார் என்றும் இதனால் ஓட்டுநர் விதிமீறலோ, பாலிஸி விதிமீறலோ இல்லை என்றால் சரியல்ல. 3-ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டிருக்கிறார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

Dr.V.Sree Vidya Date: 2026.07.24 18:53:24 +0530

Chief Judicial Magistrate,
Erode.